**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.219/2021**
**Prosecution Witnesses : 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பழனிச்சாமி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **கந்தவேல்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(10.04.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி 30.06.2019ம் தேதி ஓய்வு பெற்று திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூடக்கோவில் காவல் நிலையத்தில் பணியாற்றும் போது 02.07.2017ம் தேதி 21.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும் போது எலியார்பத்தி தெற்கு தெருவை சேர்ந்த புலியன் மகன் மலைச்சாமி நிலையத்தில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான மனுவை பெற்று கூடக்கோவில் காவல் நிலைய குற்ற எண். 128/2017, ச/பி. 279, 304(எ) இதச வாக வழக்கு பதிவு செய்தேன். **அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்**. அதை புகாருடன் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்பு மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு விசாரணைக்காக திருமங்கலம் தாலுகா வட்ட காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

புகாரில் வாகனம் ஓட்டியவரின் பெயர் அடையாளம் எதுவும் சொல்லபடவில்லை என்றால் சரிதான். புகாரில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் அடையாளம் குறித்து சொல்லபடவில்லை என்று சொன்னால் வாகனத்தின் எண் சொல்லப்பட்டுள்ளது. புகார்தாரர் சம்பவயிடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றார் என்ற விபரம் இல்லை என்று சொன்னால் சரிதான். புகாரில் எந்த வகையான வாகனம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் புகார் கொடுக்கும் வரை விபத்து பற்றி எங்களுக்கு தகவல் தெரியாது என்றாலும் எந்த வாகனமும் எங்கள் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை